**திருவள்ளூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் திரு.எஸ். குமார், பி.இ.,**
**சுருக்கம்:**

பணிக்குழு – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இவ்வலுவகத்தில் பணியமர்த்தப்பட்ட திரு. நீ. மணிகண்டன், இவ்வலுவலக இளநிலை உதவியாளரின் பணியில் சேர்ந்த நாளான 17/08/2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தி உத்தரவிடப்படுகிறது.

---

அ/ 1100/2021 நாள் : 17 /09/ 2021

படிக்கப்பட்டது:-

பார்வை
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண் 2387/PSD-I/ 2020, நாள் 28/05/2020.
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஜி3/16386/2020–2, நாள் 29/07/2020
3. சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் ஓ1/12283/2020, நாள் 04/08/2020.

********

**ஆணை :-**

பார்வை (1) இல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி , சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.நீ. மணிகண்டன் இளநிலை உதவியாளர், பார்வை (3) இல் காணும் சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணியமர்த்தபட்டு 17/08/2020 அன்று முற்பகல் முதல் திருவள்ளூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணி புரிந்து வருகிறார். இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்செய்யப்பட்டு மூன்றாண்டு தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தி உத்தரவிடப்படுகிறது.

மேலும் இவரது பணிவரன் முறையானது சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2018–2019 மற்றும் 2019–2020 ம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுகள் – IV ல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக நிலுவையிலுள்ள ரிட்மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது.

"The regularizartion is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to combined Civil Service Examination – IV services for the year 2018-2019 and 2019-2020 recruitment."

இவரது தெரிவு உறுதி செய்யப்பட்டது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு அவரது பணி உரிய அலுவலர்களால் வரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்பட வேண்டும் என்ற உத்தரவிற்கிணங்க, இவ்வாளை பிறப்பிக்கப்படுகிறது. மேலும், பார்வை (3)இல் படிக்கப்பட்ட செயலாணைகளின்படி பணிநியமனம் செய்யப்பட்ட இரண்டு வருட காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிபந்தனைகளை நிறைவு செய்தால்தான் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருத்தினை முடித்தவராக அறிவிக்கப்படும் எனவும் இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர் அடுத்த பதவி உயர்வுக்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் – I மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் துறை தேர்வு பகுதி "அ" மற்றும் "ஆ" வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்கள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

இணை இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
திருவள்ளூர்.

13/8/2024

**பெறுநர்**

திரு. நீ. மணிகண்டன்,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது:-**

1. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கிண்டி, சென்னை –32.
2. கூடுதல் இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கிண்டி, சென்னை –32